கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

O.S.. No.117/2009

தேதி –29.06.2022

(வா.சா–1) – சாந்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2–ம் பிரதிவாதி தரப்பில் மேலும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

முருகவேல் செட்டியாரின் மனைவி ரத்தினத்திற்கு அவரது தாயார் வழியில் சொத்துக்கள் பாத்தியப்பட்டு வந்துள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் அவருக்கு அவ்வாறு தாயார் வழியில் சொத்துக்கள் பாத்தியப்பட்டு வந்துள்ளது என்றும் நான் வழக்கிற்காக அதனை மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல . S.R.M.மனோகரன் இறக்கும் வரை அவர் தான் அவரது தாயார் ரத்தினத்தி பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் கணவருடைய தனிப்பட்ட வருமானத்தை காண்பிப்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் ராமசாமி மற்றும் முத்துச்சாமி ஆகியோரும் சேர்ந்து 18.11.2016 தேதி வழக்கு சொத்தில் 2–ம் பிரதிவாதியின் சுவாதீனத்திற்கு தொந்தரவு செய்ய சொத்தில் அத்துமீறி உள்ளே செல்ல முயற்சித்தோம் என்றால் சரியல்ல . அது சம்மந்தமாக 19.11.2016 தேதி 2–ம் பிரதிவாதி எங்கள் மீது நெய்க்காரப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து புகார் மனு ஏற்புச் சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அவர்கள் தான் எங்களிடம் பிரச்சனைக்கு வந்தார்கள் . அவ்வாறு அவர்கள் தான் எங்களிடம் பிரச்சனைக்கு வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் 2–ம் பிரதிவாதி கொடுத்த புகாருக்கு பதில் நடவடிக்கைகாக நான் வழங்கிய பொய்யான புகார் தான் வா .சா.ஆ.–18 என்றும் சொன்னால் சரியல்ல. 2–ம் பிரதிவாதி என் மீது கொடுத்த புகார் பற்றிய விவரம் எனக்கு நன்றாகத் தெரிந்தும் அதனை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் எங்களுடைய கூட்டு சுவாதீனத்தில்

இருப்பதாகவும் அதற்கு பிரதிவாதிகள் இடையூறு விளைவிப்பதாகவும் பொய்யான ஆவணங்கள் தயாரித்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.–13 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் இல்லாநிலையது என்றால் சரியல்ல . அசல் வழக்கு எண் .167/2021 வழக்கில் கண்ட எ அட்டவணை சொத்து பிரிக்கப்படாத பொதுவில் உள்ள சொத்து என்றும் அதைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது சட்டப்படி தடை செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல . அசல் வழக்கு எண்.167/2021 வழக்கில் கண்ட பி அட்டவணை சொத்தைப் பொறுத்து அசல் வழக்கு எண் .117/2009 வழக்கின் சொத்து விவரத்தில் விடுபட்டு விட்டது என்றும் சொத்து விவரங்களை சேர்க்க வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று இ .ம.எண்.2452/2010 மனு எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அது இந்நீதிமன்றத்தில் 25.8.2016 தேதி தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தால் மேற்படி பி அட்டவணை சொத்து முன்தீர்ப்பு தடை கோட்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . வா.சா.ஆ.–9 ஆவணமும் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல . 2 வழக்குகளும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

ஒம்/–ஜெ.ஜெயசுதாகர்,
கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.